கீழ் கண்ட கேள்விகள் அனைத்திற்கும் உங்கள் குழந்தை சாதாரணமாக என்ன செய்யும் என்று பதில் கூறவும். செய்கையை ஓரிருமுறைதான் பாரத்திருந்தீர்கள் என்றால் இல்லை என்று பதில் கூறவும்

1. உங்கள் குழந்தைக்கு உங்கள் முட்டியின் மீது அமர்ந்து ஊஞ்சல் போல் ஆட்டப் படுவதோ அல்லது மேலும், கீழும் ஆட்டப் படுவதோ பிடிக்குமா? ஆமாம் இல்லை

2. மற்ற குழந்தைகள் செய்யும் செயல்களை கவனிப்பதில் ஆர்வம் காட்டுகிறதா? ஆமாம் இல்லை

3. மாடிப்படிகளில் தாவி ஏறுவது போல எல்லா பொருட்களின் மீதும் தாவி ஏற முயற்சிக்கிறதா? ஆமாம் இல்லை

4. கண்ணாமூச்சி ஆட்டம், மற்றும் ஒளிந்து கொண்டு கண்டு பிடிக்கும் ஆட்டத்தில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்கிறதா? ஆமாம் இல்லை

5. உங்கள் குழந்தை பாவித்து விளையாடுமா? உதாரணமாக, போனில் பேசுவது போலவோ அல்லது பொம்மையை குழந்தை போல பாவித்து விளையாடுவதோ உண்டா? ஆமாம் இல்லை

6. ஆள்காட்டி விரலைப் பயன்படுத்தி எதையும் சுட்டிக் ஏதாவது கேட்பதோ உண்டா? ஆமாம் இல்லை

7. ஆள்காட்டி விரலைப் பயன்படுத்தி எதிலும் ஆர்வம் காட்டுவது உண்டா? ஆமாம் இல்லை

8. சிறிய பொம்மைகளை (கார்கள், அடுக்கும் கட்டைகள்) வைத்து சரியான முறையில் விளையாடுகிறதா? கீழே போடாமல், வாயில் வைக்காமல் விளையாடுகிறதா? ஆமாம் இல்லை

9. ஏதாவது பொருட்களை எடுத்து வந்து, உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து காட்டுகிறதா? ஆமாம் இல்லை

10. ஓரிரு விநாடிகளுக்கு மேல் உங்களை நேருக்கு நேர் பாரக்கிறதா? உங்கள் பார்வையை சந்திக்கிறதா? ஆமாம் இல்லை

11. சத்தம் உங்கள் குழந்தையை பாதிக்கிறதா?அதிக சத்தம் ஏதும் கேட்டால் தன் காதுகளை மூடிக் கொள்கிறதா? ஆமாம் இல்லை

12. உங்கள் முகத்தைப் பாரத்ததும் அடையாளம் கண்டு சிரிக்கிறதா அல்லது சிரித்தால் பதிலுக்கு சிரிக்கிறதா? ஆமாம் இல்லை

13. நீங்கள் செய்வதை அப்படியே திருப்பிச் செய்கிறதா? (நீங்கள் முகத்தை அழகு காட்டினால், சேஷ்டை செய்தால் குழந்தையும் திரும்ப செய்கிறதா?) ஆமாம் இல்லை

14. குழந்தையின் பெயரைச் சொல்லி அழைத்தால் உடனே அதனை அறிந்து கொண்டு திரும்பி பார்க்குமா? ஆமாம் இல்லை

15. அறையின் மறு கோடியில் உள்ள பொம்மையை உங்கள் குழந்தைக்கு சுட்டிக் காட்டினால் அதை கவனித்துப் பார்க்குமா? ஆமாம் இல்லை

| | | |
|---|---|---|
| 16. உங்கள் குழந்தை நடக்கிறதா? | ஆமாம் | இல்லை |
| 17. நீங்கள் பார்க்கும் பொருட்களை குழந்தையும் கவனித்துப் பார்க்கிறதா? | ஆமாம் | இல்லை |
| 18. குழந்தை தன் முகத்தின் அருகில் இயல்புக்கு மாறான விரல் அசைவுகளைச் செய்வதுண்டா? | ஆமாம் | இல்லை |
| 19. உங்கள் கவனத்தை தன்பால் திருப்ப வேண்டும், தன்னை பார்க்க வேண்டும் என்று குழந்தை ஏதாவது செய்வதுண்டா? | ஆமாம் | இல்லை |
| 20. உங்கள் குழந்தைக்கு காது செவிடாக இருக்குமோ என்று நீங்கள் நினைத்தது உண்டா? | ஆமாம் | இல்லை |
| 21. பிறர் பேசுவதை உங்கள் குழந்தை புரிந்து கொள்கிறதா? | ஆமாம் | இல்லை |
| 22. சில சமயம் உங்கள் குழந்தை வெறுமையான இடத்தை வெறித்து பார்க்கிறதா அல்லது எந்த நோக்கமும் இல்லாமல் இங்கும் அங்கும் போகிறதா? | ஆமாம் | இல்லை |
| 23. முன் பின் தெரியாத, புதியதை பார்த்தால் உங்கள் குழந்தை உங்கள் முகத்தில் என்ன வெளிப்பாடு தோன்றுகிறது என்று கவனிக்கிறதா? | ஆமாம் | இல்லை |